**IN THE COURT OF SPECIAL SUBORDINATE JUDGE (LAOP), ARAKKONAM.**

**OS. 121/2019**

**Deposition of Witness : PW-1**

**பெயர் : ஜெயந்தி**

**தந்தை பெயர் : தசரதன்**

**Solemnly affirmed in accordance with the provisions of Section 6 of the Oaths Act, 1969 on 27.06.2023.**

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

எனக்கு தற்போது 43 வயதாகிறது. 43 ஆண்டுகலாக என் வீட்டில் தான் இருக்கிறேன். அதே தெருவில் தான் பிரதிவாதியும் குடியிருக்கிறார் என்றால், தற்போது இருக்கிறார். பிரதிவாதி எத்தனை வருடங்களாக அந்த தெருவில் குடியிருக்கிறார் என்று எனக்கு தெரியது. வழக்கு சொத்தில் பிரதிவாதி எத்தனை வருடங்களாக குயிருக்கிறார் என்றால், வழக்கு சொத்து எனக்கு பாத்தியப்பட்டது என்று தெரிய வந்ததிலிருந்து எனக்கு தெரியும். 16.06.2017 முன்பு வழக்கு சொத்தை பற்றி என்ன ஆவணங்கள் இருந்தது யாருடைய பெயரில் இருந்தது என்று எனக்கு தெரியாது. 2017–க்கு பிறகு என் பாட்டி அங்கமாளுடைய பெட்டியை உடைத்து அதில் உள்ள ஆவணங்களை பார்த்த பிறகு தான் வழக்கு சொத்து என்னுடையது என்று தெரியவந்தது. அதற்கு முன்பு யார் பெயரில் பட்டா இருந்தது, யாருடையது என்று எனக்கு தெரியாது. 1983–லிருந்து 2017–ம் ஆண்டு 09–ம் மாதம் வரை என் தந்தை மனநிலை சரியில்லாம் இருந்தார் என்றும் அதன் பிறகு தான் சரியானார் என்றும், பிறகு வழக்கு சொத்து பற்றி என்னிடம் எப்போது சொன்னார் என்றால், அப்போது தான் சொன்னார் மாதம் நினைவில்லை.

வழக்கு சொத்து தவிர வேறு சொத்துக்களை பற்றியும் வேறு சர்வே எண்களை பற்றி விவரங்களை சொன்னாரா என்றால், சொன்னார். வழக்கு சொத்தில் யார் குடியிருக்கிறார் என்று சொன்னாரா என்றால் அது பற்றி சொல்லவில்லை. வழக்கு சொத்தில் அ அட்டவணை சொத்து அரசத்தமாள் கோயில் அருகில் உள்ளதா என்றால், அங்கம்மாள் சொத்து தான் உள்ளது. வழக்கில் தவறுதலாக அரசத்தமாள் கோயில் என்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதை திருத்த மனு ஏதேனும் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் அது பற்றி நினைவில்லை. அரசத்தமாள் கோயிலுக்கும், படவேட்டம்மன் கோயிலுக்கும் இடையில் எவ்வளவு தொலைவு இருக்கும் என்றால், நடந்து செல்லும் தூரம் இருக்கும். 25 அடி தூரம் இருக்கும் என்றால் அது பற்றி தெரியாது. படவேட்டம்மன் கோயில் எதிரில் தான் பிரதிவாதி வீடு உள்ளது என்றால் சரி தான். அதற்கு அடுத்து தான் அரசத்தமாள் கோயில் உள்ளது என்றால் சரி தான்.

குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.